# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2460/10 - 2025 ඔක්තෝබර් මස 28 වැනි අඟහරුවාදා - 2025.10.28**

2460/10 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபை

## மாகாண சபை அறிவித்தல்கள்

**தென் மகாகாணத்தின் மாகாண சபை**

தென் மாகாண சபையில் 2019 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்கம் கொண்ட கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய சாசனக் கட்டளைகள்.

தென் மாகாணத்தின் மாகாண சபையில் 2019 ஆம் இலக்கம் கொண்ட கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய சாசனத்தில் 24 ஆம் பிரிவின் கீழ் விடயப் பொறுப்பமைச்சரிடம் வழங்கியுள்ள தத்துவங்களை, தற்போது தென் மகாகாண சபையை கலைத்துள்ளமையால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் 154இ பிரிவிற்கமைய தென் மாகாகாண ஆளுநரான என்னிடம் வழங்கியுள்ளமையால், தென் மாகாணத்தின் மாகாண சபையில் 2019 ஆம் ஆண்டின் 02 ஆம் கொண்ட கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய சாசனக் கட்டளைகளில் 03 ஆம் கட்டளையை நீக்கி அதற்கு பதிலாக கீழ்க் காணும் கட்டளையை பதிலீட்டுச்செய்தவாறு, அந்த கட்டளைத் தொகுதியை திருத்தி இத்தால் கட்டளையிடப்படுகின்றது. இக் கட்டளைகள் 2020.07.17 ஆம் திகதி முதல் அமுலாக்கப்பட வேண்டும்.

**மத்தும கன்கானமலாகே பந்துல ஹரிச்சந்திர,**
கௌரவ ஆளுநர்,
தென் மாகாண சபை.

தென் மாகாண ஆளுநர் அலுவலகம்,
கீழ் டிக்சன் வீதி,
2025, ஒற்றோபர் 15.

**03.** (i)

(அ). இந்த ஓய்வூதிய செயற்திட்டம் நடைமுறையாகின்ற திகதிக்கு சேவையில் ஈடுபட்டிருந்த, செயற்திட்டத்தில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு உரித்துப்பெற்ற ஒருவர், தாங்கள் ஓய்வூதிய திட்டத்தில் பங்களிப்பாளராக சேர்வதற்காக 2023.12.31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முந்திய திகதியில் விருப்பம் தெரிவித்தல் வேண்டும்.

(ஆ). இந்த ஓய்வூதிய செயற்திட்டத்தில் சேர்வதற்கு எதிர்பார்க்கின்ற ஊழியர் ஒருவரால் இங்கே இது முதல் பணிப்பாளராக அழைக்கப்படும், செயற்திட்டத்தின் பணிப்பாளரால் பயன்படுத்துவதற்காக விதிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தை நிரப்பி இக் கட்டளை நடைமுறையாகும் திகதியிலிருந்து 2025.12.31 ஆம் திகதி வரையிலான கால எல்லைக்குள் அப்போதைக்கு அதிகாரம் வழங்கியுள்ள உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii)

(அ). இந்த செயற்திட்டம் நடைமுறையாகிய திகதிக்குப் பின்னர் மற்றும் இக் கட்டளைகள் நடைமுறையாகும் திகதிக்கு முன்னர் நிரந்தர சேவையில் சேர்ந்து 90 நாட்களை கடந்துள்ள ஊழியர் ஒருவர் 2025.12.31 ஆம் திகதி வரையிலான கால எல்லைக்குள் பணிப்பாளரால் பயன்படுத்துவதற்காக விதிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தை நிரப்பி சேவை நிமித்தத்திற்காக பணிப்பாளரால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ). இந்த செயற்திட்டம் நடைமுறையாகிய திகதியின் பின்னர் மற்றும் இக் கட்டளைகள் நடைமுறையாகும் திகதிக்கு முன்னர் நிரந்தர சேவையில் சேர்ந்து 90 நாட்களை கடக்காத ஊழியர் ஒருவர், ஏற்புடைய கூட்டுறவுச் சங்கத்தால் சேவையை நிரந்தரப் படுத்தும் கடிதத்தை வெளியிடப்பட்ட திகதியிலிருந்து 90 நாட்களுக்குள் பணிப்பாளரால், பயன்படுத்துவதற்காக விதிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தை நிரப்பி சேவை நிமித்தத்திற்காக பணிப்பாளரால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(iii)

இக் கட்டளை நடைமுறையாகிய திகதியிலிருந்து நிரந்தர சேவையில் சோந்த ஊழியர் ஒருவர் ஏற்புடைய கூட்டுறவுச் சங்கத்தால் சேவையை நிரந்தரப் படுத்தும் கடிதத்தை வெளியிடப்பட்ட திகதியிலிருந்து 90 நாட்களுக்குள் பணிப்பாளரால் பயன்படுத்துவதற்காக விதிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தை நிரப்பி சேவை நிமித்தத்திற்காக பணிப்பாளரால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

EOG 10 - 0257

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.